பக்கங்கள் : நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 05 வெள்ளிக்கிழமை (19.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 55

## வடமராட்சியில் இரு இடங்களில் மோதல்

யாழ்ப்பாணம், ஜன.19

வடமராட்சியில் இரு வேறு இடங்களில் நேற்று மோதல் சம்பவங்கள் இடம்பெற்றன.

நேற்று அதிகாலை 6.45 மணியளவில் உடுப்பிட்டியில் உள்ள முகாம் மீதும் -

பிற்பகல் 2.40 மணியளவில் நவிண்டில் பகுதியில் உள்ள முகாம் மீதும் - தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவங்களின் போது ஏற்பட்ட சேதம் குறித்து மேலதிக விவரங்கள் தெரியவரவில்லை. (அ-1-155)

## நாகர் கோயிலில் சினைப்பர் தாக்குதல் சிப்பாய் பலி; ஒருவர் காயம்!

கொழும்பு, ஜன.19

நாகர்கோயில் முன்னரங்க நிலை மீது நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார். மற்றும் ஒருவர் காய

(04 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு மீண்டும் களப்பணிக்குத் திரும்புகிறது

## தரப்புகளிடமிருந்து பாதுகாப்பு உத்தரவாதம்

கொழும்பு, ஜனவரி 19

இலங்கையில் போர் நிறுத்தத்தைக் கண்காணிக்கும் 'ஸ்கன்டிநேவியன்' கண்காணிப்புக் குழுவினர், வடக்கு - கிழக்கு உட்பட சகல பகுதிகளிலும் தங்கள் களப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கின்றனர் என்று குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

குடாநாடு உட்பட மோதல் நடைபெறும் பகுதிகளுக்குக் கண்காணிப்புக் குழுவினர் புறப்பட்டுச் சென்றுள்ளனர் எனவும் அந்தப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

கண்காணிப்புக்குழு உறுப்பினர்களின் பாதுகாப்புக்கு அரசும், விடுதலைப் புலிகளும் உத்தரவாதம் வழங்கியிருப்பதை அடுத்தே கண்காணிப்புக் குழுவினர் மீண்டும் தங்கள் பணிகளை நிரந்தரமாக ஆரம்பிக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் தற்சமயம் மொத்தமாக 34 உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களில் முப்பது பேர் ஒரு சமயத்தில் பணியில் இருப்பர் என்றும், நால்வர் மாத்திரம் சுற்று அடிப்படையில் விடுமுறையில் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## கோட்டபாய மீதான தாக்குதல்: 3 தமிழர்களும் விடுதலை

கொழும்பு, ஜனவரி 19

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷவை இலக்கு வைத்துக் கொழும்பில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலை அடுத்து, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்கள் நேற்று விடுவிக்கப்பட்டனர். இவர்கள் மூவரும் நேற்றுக் கொழும்பு பிரதம நீதிவான் குசலசரோஜினி வீரவர்த்தன முன்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# படைவலு ரீதியில் எப்போதும் புலிகள் தயார் நிலையிலேயே இருக்கின்றனர்

## கண்காணிப்புக் குழுவின் கூற்றுக் குறித்து இளந்திரையன்

கிளிநொச்சி, ஜன.19

கிளிநொச்சியில் விடுதலைப் புலிகள் மிகப்பெரும் தாக்குதலுக்கு தயாராகி வருகின்றனர் என்றும், தென்னிலங்கையின் நிலைமையைப் பொறுத்து அவர்களின் தாக்குதல்கள் ஆரம்பமாகலாம் என்றும் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு தெரிவித்திருந்தது.

இது குறித்து சிங்கப்பூர் 'தமிழ்முரசு' நாளேட்டுக்கு கருத்துத் தெரிவித்த விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன், இந்தத் தகவலை எந்த ஆதாரத்தில் இலங்கை போர் நிறுத்த கண்காணிப்புக்குழு கூறியது என்று தெரியவில்லை. நாங்கள் அவர்களிடம் விளக்கம் கேட்டுள்ளோம். எனினும் எப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் படையினர் மீது துப்பாக்கிச் சூடு

கொழும்பு, ஜன.19

மன்னார் சூரிய கட்டைக்காடுப் பிரதேசத்தில் நேற்றுக் காலை சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினரை இலக்குவைத்து துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது -

இச்சம்பவத்தின்போது படையினருக்கு சேதம் ஏதும் ஏற்படவில்லையென பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்து அப்பகுதியில் மேற்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஷெல் வீச்சில் அறுவர் காயம்!

மட்டக்களப்பு, ஜன.19

வாகரை வைத்தியசாலை வளாகத்தில் நேற்று ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததில் ஆறு பொதுமக்கள் காயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலையில் வைத்தியசாலையை அண்டிய பகுதியிலும் வைத்தியசாலை வளாகத்தினுள்ளும் பல ஷெல்கள் வீழ்ந்து - வெடித்துள்ளன.

இதன்போது இருவர் காயமடைந்தனர். இதனையடுத்து வைத்தியசாலை நிர்வாகத்தினால் சர்வதேச செஞ்சிலுவைக் குழு, யுனிசெவ், போர் நிறுத்தக் கண்காணிப்புக்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# மன்னார் எண்ணெய்ப் படிவுப் படுக்கை அகழ்வு; இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வழங்கப்பட்டன

## 105 லட்சம் டொலர்களுக்கு நோர்வேயின் தரவுகள் கொள்முதல்

புதுடில்லி, ஜன.19

மன்னார் கடல் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய்ப் படிவுப் படுக்கைகளில் ஒன்றை இலங்கை அரசாங்கம் அகழ்வுப் பணிக்காக இந்தியாவுக்கு வழங்கியுள்ளது.

காவேரி நதிப்படுக்கைக்கு அண்மித்ததாக உள்ள படுக்கைகளில் ஒன்றே இந்தியாவின் எண்ணெய் மற்றும் இயற்கைவாயு கூட்டுத்தாபனத்துக்கு (ONGS) வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்ற இரண்டாவது படுக்கை - (அதுவும் காவேரி நதிப்படுக்கையை அண்மித்தது) சீனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எஞ்சிய ஆறு எண்ணெய்ப் படிவுப் படுக்கைகளும்எதிர்வரும் மூன்று மாதங்களில் ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு வழங்கப்படும் என்று இலங்கையின் போக்குவரத்து பெற்றோலிய வள அமைச்சர் ஏ. எச்.எம். பௌசி தெரி வித்தார்.

புதுடில்லியில் நடைபெறும் 'பெற்றோரெக்' மாநாட்டை முன்னிட்டு தகவல் வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மன்னார் கடற் பிராந்தியத்தில் உள்ள எண்ணெய்ப் படிவுப் படுக்கைகள் குறித்த ஆய்வு மற்றும் கணிப்பீட்டுப் பணிகளை நோர்வேயைச் சேர்ந்த நோப்பெக் (Nopek) நிறுவனம் மேற்கொண்டிருந்தது.

### நோர்வே நிறுவனத்திடம் விலை கொடுத்து வாங்கப்பட்டது

நோர்வே நிறுவனத்திடமிருந்து 105 லட்சம் டொலர்கள் செலுத்தி, ஆய்வு மற்றும் கணிப்பீட்டுத் தரவுகளை இலங்கை அரசாங்கம் வாங்கிவிட்டது.

அந்த விவரங்களில் அடங்கியுள்ள செயற்பாட்டு விவரங்களுக்கு அர்த்தம் கண்டு வேலைத் திட்டங்களை வகுத்துத்

(04 ஆம் பக்கம் பார்க்க)

# வாகரை ஆஸ்பத்திரிப் பகுதி மீது தாக்குதல் நடத்துவதற்குக் கண்டனம்

## செஞ்சிலுவை சர்வதேசக் குழு தலைமையகம் அறிக்கை

ஜெனீவா, ஜன.19

வாகரைப் பிரதேசத்தில் ஆயிரக் கணக்கான பொது மக்கள் தங்கியுள்ள ஆஸ்பத்திரிப் பகுதி மீது நடத்தப்படும் எறிகணைத் தாக்குதல்கள் மற்றும் மோதல்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது குறித்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு கண்டனமும் அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளது.

ஆஸ்பத்திரி பாதுகாப்புப்பிரதேசம் என்ற அந்தஸ்துக் கொண்டது என்பதையும் அதனை அண்டிய பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ள பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நியதியையும் மீறக் கூடாது என்று இரண்டு தரப்புகளையும் செஞ்சிலுவைக்குழு கேட்டுள்ளது.

★ சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் பிரகாரம் ஆஸ்பத்திரியும் அங்கு வைத்திய சேவைக்கென அமர்த்தப்பட்டவர்களும் எந்த சூழ்நிலையிலும் தாக்குதலுக்கு உள்ளாக்கப்படக் கூடாது.

★ ஆஸ்பத்திரியிலிருந்து இராணுவத்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கட்சி அதிருப்திக் குழு அரசுடன் இணைவதில் சங்கடம்

யாழ்ப்பாணம், ஜன.19

ஐ.தே.கட்சியில் இருந்து பிரிந்து செல்லும் குழுவை அரசில் இணைப்பதில் சிக்கலான நிலையும் சங்கடமும் தோன்றியுள்ளதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

ஐ.தே.கட்சியைச் சேர்ந்த 20 நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசில் சேர விரும்புகின்றனர் என்றும்-

அவர்களுக்கு குட்டி அமைச்சுப் பதவிகளை வழங்க அரசு தயாராகி வருகின்றது என்றும்- முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தன.

அரசுடன் இணையவிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் பத்து அமைச்சுப் பதவிகளை வழங்க அரசின் அமைச்சர்கள் இணங்கியிருந்தனர் என்று பின்னர் வந்த தகவல்கள் தெரிவித்தன.

எனினும் ஸ்ரீ.ல.சு.கட்சியைச் சேர்ந்த அமைச்சர்கள் பலர்தம்வசமுள்ள திணைக்களங்களை விட்டுக்கொடுக்க இப்போது

(04 ஆம் பக்கம் பார்க்க)

## அரசில் இணைவதற்காக ஜனாதிபதியின் பதிலுக்கு காத்திருக்கின்றது மு.காங்கிரஸ்

கொழும்பு, ஜன.19

அரசுடன் இணைவதற்கான சாதகமான பதிலை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்பார்த்திருப்பதாகவும், அமைச்சுப் பதவிகளைப் பெறுவது பற்றி இன்னும் கட்சி தீர்மானிக்கவில்லை என்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் எம்.ரி. ஹஸன் அலி நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் -

''அரசுடன் இணைவதற்கு நிபந்தனையாக நாம் ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். அவற்றைப் பெற்றுக் கொண்ட அரச குழுவினர் அவற்றை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துப் பதிலைப்

(04 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

கலாநிதி

## சண்முகலிங்கம் சுகந்தன்

**Dr.S.Suganthan**

B.Sc.(Hons),Ph.D.,MIET,MIEEE, MBCS, MACM.

Dr.S.Suganthan received his B.Sc. Honours degree in Computer Science in 2001 from University of Jaffna, Srilanka., He got his Ph.D. in Image processing and Computer vision in 2006 from University of Derby, U.K., He is currently a Post - Doctoral Research Associate at Intelligent Systems Engineering Laboratory, University of Vister, U.K. He is a member of IET, IEEE, BcS and Acm.

சீர்மிகு யாழ். பல்கலைக்கழக கணனிச் சிறப்புத் தேர்ச்சியால்,
பார் புகழ் புலமைப்பரிசிலால், கடல் கடந்து கற்றுக் கலாநிதியாய்!
எங்கும் நிறை கணனித்துறையதில் இன்று (19.01.2007) பட்டங்கள்
பல எய்தும் வேளை, பொங்கும் பெருமித உவகையில் பூரித்து
வாழ்த்தினோம் யாம்.

ச.செல்வநாயகி(அம்மா),
ச.நாகதாரணி(தங்கை),
ச.முகுந்தன்(தம்பி).

*'சுகந்தம்',*
*இணுவில் கிழக்கு, இணுவில்.* (57221)

---

# திருமண நிறைவுநாள் வாழ்த்து

ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

**தவானந்தன்**(நந்தா)

சாவகச்சேரி, சிவன்கோயிலடி

**அஜந்தா**

(நற்பண்புடைய அன்பார்ந்த
தம்பதியர்)

*"இல்லறம் ஓடமது இன்பவெள்ளத்தில் ஓடிட*
*நல்லறம் நயந்து நாளும் பொங்கி மருவிட*
*தூறலாய் தொடங்கும் தூய நேசம்*
*திருவாழ்வில் தொடரட்டும் பல்லாண்டு"*

ஓராண்டு நிறைவு நன்நாள்தனில் வாழ்த்துகின்றோம் மனமார.

(57046) வாழ்த்தும் பெற்றோர், சகோதரர்கள்.

---

# SCCஇன் கணனிப் பயிற்சி நெறிகள்
## ஆரம்பம் 20.01.2007

கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை
3000ரூபாவுடன் கற்க, ஓர் அரிய சந்தர்ப்பம்

| | |
|---|---|
| DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003 | 4 Months |
| DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING | 4 Months |
| DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING | 3 Months |
| DIPLOMA IN DESKTOP PUBLISHING | 4 Months |
| DIPLOMA IN INTERNET E-MAIL | 4 Months |
| DIPLOMA IN WEB DESIGNING | 4 Months |
| DIPLOMA IN VISUAL BASIC | 2 Months |

Special Offer 3000/=

Note :- கீழுள்ள புதிய முகவரியில் பயிற்சிநெறிகள் யாவும் நடைபெறுகின்றன.

**Softview Computer College**
55, Arasady Road,
Jaffna.
T.P: 021 2225170

---

# IIS COMPUTER COURSES

**O/L** பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே !!
பரீட்சைப் பெறுபேறு வெளிவரும் வரையான காலத்தை
**IIS** உடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்

*விசேட சலுகைக் கட்டணத்தில்*
*புதிய பிரிவுகள் ஆரம்பம்*

பிரிவு 3 : 21.01.2007 பிரிவு 4 : 22.01.2007

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில்
இணைவதனூடாக
கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்

Institute of Informatics Studies
# 100, Clock Tower Road, Jaffna.
T.P. : 021 222 2831

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



## அமரர் மருதர் சரவணை

அன்னை மடியில் 09.10.1926 ஆண்டவன் திருவடியில் 20.12.2006

அன்பும் ஆதரவும் பாசமும் மிக்க அப்பாவே!
இன்முகத்துடன், புன்னகை புரிந்து எல்லோர்
உள்ளத்திலும்
நீங்காத இடத்தைப் பிடித்து ஈவிரக்கம் காட்டும் -
தெய்வமே!
உங்கள் பிரிவைத் தாங்க முடியாது தவிக்கின்றோம்
அப்பா!

*20.12.2006 எமது குடும்பத்தலைவர் சிவபதமடைந்த செய்தியை அறிந்து எங்களுக்கு சகலவிதத்திலும் ஆறுதல் நல்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம். அத்துடன் இன்று (19.01.2007) வெள்ளிக்கிழமை நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

கனகசபை வீதி,
மானிப்பாய். (65954) குடும்பத்தினர்.

---

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!
COMPUTER EXPRESS
ஒருவாரகால முழுநேர பயிற்சிநெறிகள்

*Jaffna Head office*
No 15,
Brahmbhadi Lane
(off Stanly Rd.)
021-222 8250,
0777 222422

*Branch office*
No 167,
Kasthuriyar Rd.
(Near Uthayan Publication)
Jaffna.

**Diploma in Hardware Engineering**
◆ Assembling ◆ Upgrading ◆ Troubleshooting ◆ Fault Finding ◆ Repairing ◆ Servicing ◆ Software Installation ◆ Configuring ◆ Networking Etc..
Course Fee :2000/=

**Diploma in Computerized Accounting**
ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.
Course Fee :3500/=

**Diploma in Video Mixing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Adobe Premier ◆ Cool3D Studio ◆ Pinnacle Studio ◆ VCD Cutter.
Course Fee :3000/=

**Diploma in Graphic Designing**
◆ Introduction to Computer ◆ Operating System(Win XP) ◆ Internet & email ◆ Adobe Photoshop ◆ Corel Draw ◆ Cool3D Studio ◆ Macro media Flash MX
Course Fee :2000/=

ஒரே நாளில் ஆரம்பம்:- 22/01/2007 - 09.00

---

# கண்ணீர் அஞ்சலி

## ஜோண் ஆபிரகாம் செல்வரட்ணம்(செல்வம்)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாண்டியன்தாழ்வு,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

ஆ.சாந்தலிங்கம்
குடும்பத்தினர்.

---

# நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

## காசிப்பிள்ளை பொன்னையா

பிறப்பு 17.06.1933 இறப்பு 20.12.2006

எமது குடும்பத்தலைவரின் மறைவு குறித்த துயரில் இணைந்து கொண்ட அன்பு உள்ளங்களுக்கு நன்றி கூறுவதுடன் இன்று நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சோனெழு, கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.* (57213) குடும்பத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் சிரேஷ்ட
மாணவ முதல்வன் சி.சிவசங்கர்
அவர்களின் அன்புத் தாய்

## திருமதி சிவசுப்பிரமணியம் தில்லைநாயகி

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தின் துயரத்தில் பங்குகொள்வதோடு, அவரது ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை
முதலாம் வருடம்
D வகுப்பு ஆசிரிய மாணவர்கள்

---

# மரண அறிவித்தல்கள்

## வஸ்தியாம்பிள்ளை மரியம்மா



நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட வஸ்தியாம்பிள்ளை மரியம்மா18.01.2007இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளையின் மனைவியும் காலஞ்சென்றவர்களான லூர்த்தம்மா, அன்னம்மா ஆகியோரின் சகோதரியும் அஞ்சலோ (யாழ்.பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தியோகத்தர்), லியோனி (லண்டன்), ஆகியோரின் தாயும் ஜெயா, நேசன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் சர்மிளா, பிறேமிளா, றுபின் சலா, எட்மன், பிறேமினி, குமரன், மெந்துசான் (லண்டன்), லெபோனா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று வெள்ளிக்கிழமை மு.ப.10மணிக்கு புனித சந்தனமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

54/8, 3ஆம் ஒழுங்கை,
கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு.
(சந்தனமாதா கோயில் முன் ஒழுங்கை).

தகவல்:
அஞ்சலோ
(மகன்-துரை),
ராஜினி (பேரமகள்)

## கணபதிப்பிள்ளை புஸ்பராசா

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை புஸ்பராசா (ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்) 15.01.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - சின்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னம்மா தம்பதியரின் மருமகனும் மணி என்றழைக்கப்படும் கமலாதேவியின் கணவரும் ஜெயக்குமார், ரதி ஆகியோரின் தந்தையும் நிர்மலா, ஸ்ரீதரன் ஆகியோரின் மாமனும் குணநாயகி, காலஞ்சென்றவர்களான சவுந்தரநாயகி, துரைராஜா மற்றும் செல்வநாயகி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மகாதேவா, சண்முகநாதன் மற்றும் சுகுணாவதி, காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

*இல.10, நடுத்தெரு லேன்,*
*அரியாலை.*

தகவல்:
ஜெயக்குமார்
(மகன்).

---

யாழ். வண்ணார்பண்ணை வட கிழக்கு கலட்டி
அருள்மிகு எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரி அம்பாள்
தேவஸ்தான முன்னாள் பிரதமகுரு

## சிவஸ்ரீ அருணாசலக் குருக்கள் துரையப்பா ஐயா

அவர்களின் 40 ஆவது ஆண்டு நினைவு நாளை
முன்னிட்டு நடைபெறும்

**நவோத்திர சகஸ்ர சங்காபிஷேக விஞ்ஞாபனமும்**
**நூல் வெளியீட்டு விழா அழைப்பும்**

இடம் : யா/கலட்டி எச்சாட்டி ஸ்ரீ மஹாமாரி அம்பாள் தேவஸ்தானம்
காலம் : நாளை(20.01.2007) சனிக்கிழமை காலை 10மணி

*இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.*

**வீரகத்தி விநாயகர் ஆலயம்,**
**கலட்டி, யாழ்ப்பாணம்.** (57222)

அமரர்
சிவஸ்ரீ அ.துரையப்பா ஐயா
குடும்பத்தினர்.

---

# பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2007
# இலங்கை போக்குவரத்துச் சபை (வடக்கு)

இலங்கை போக்குவரத்துச் சபை(வடக்கு) சாலைகளுக்கான 01.04.2007 தொடக்கம் 31.12.2007 வரையான காலப் பகுதிக்கான பாதுகாப்புக் கடமைக்காக பிரத்தியேக பாதுகாப்பு சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விவரம் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) யாழ். சாலை | காலை | 06.00 - 18.00 - 05 பேர் |
| | மாலை | 18.00 - 06.00 - 06 பேர் |
| 2) யாழ். பேருந்து நிலையம் | காலை | 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை | 18.00 - 06.00 - 02 பேர் |
| 3) மல்லாகம் வேலைத்தளம் | மாலை | 18.00 - 06.00 - 01 ஆள் |
| 4) பருத்தித்துறைச் சாலை | காலை | 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை | 18.00 - 06.00 - 03 பேர் |
| 5) காரைநகர்ச் சாலை | காலை | 06.00 - 18.00 - 03 பேர் |
| | மாலை | 18.00 - 06.00 - 03 பேர் |
| 6) மன்னார் சாலை | காலை | 06.00 - 18.00 - 04 பேர் |
| | மாலை | 18.00 - 06.00 - 04 பேர் |

ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு ஒரு நாளைக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.

விண்ணப்பிக் விரும்புபவர்கள்

1) கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் Private security Service from 01.04.2007 to 31.12.2007 எனக் குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் The Security Tender Board, Srilanka Transport Board, 200, Kirula Rd, Colombo - 05 என்றமுகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2) சேவைகள் திருப்தியற்றதாக காணும் பட்சத்தில் ஒரு மாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடை நிறுத்தம் செய்யப்படும்.
3) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல் வேண்டும்.

1) பெயரும் விலாசமும் 2) தொலைபேசி இல.
3) சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும் 4) சேவையின் தன்மை
5) பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம் 6) வங்கியின் பெயர்

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2007-02.15**

குறிப்பு - கொடுப்பனவுகள்
விண்ணப்பத்தில் பதிவு செய்யும்
பெயரிலேயே வழங்கப்படும். (E/51866)

பொது முகாமையாளர்,
இலங்கை போக்குவரத்துச் சபை
(வடக்கு)
கோண்டாவில்.

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலியும்
# சபிண்டீகரண அழைப்பும்

*பிள்ளையார் ரேடர்ஸ் உரிமையாளரும் (ஸ்ரான்லி வீதி) முன்னாள் மின்சார சபை ஊழியருமாகிய*

## அமரர் செல்லையா இரகுநாதன்

*அவர்களின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திக்கிரியைகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

டச்றோட், சண்டிலிப்பாய். (57144) குடும்பத்தினர்.

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும்
# வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி இராசம்மா சேனாதிராசா

*மலர்வு : 02.06.1923 உதிர்வு : 20.12.2006*

20.12.2006 புதன்கிழமை அன்று இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (19.01.2007) வெள்ளிக்கிழமை மு.ப.11மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

34, குமாரசாமி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (65840)

குடும்பத்தினர்.

---

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் பூபதி பொன்னு

ஆனந்த மகிழ்வில் 23.01.1943 ஆழ்ந்த கவலையில் 16.01.2003

வாழ்ந்த நாள்களின் வசந்த காலங்கள்
என்றும் காலத்தால்
வாழ்ந்து கொண்டிருக்கும்.

குடும்பத்தினர்.
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். (57229)

---

# மரண அறிவித்தல்

## *பாலசுப்பிரமணியம் பகீரதன்*

(இலங்கை மின்சாரசபை வவுனியா, அ.சுப்பையா அன்சன்ஸ் உரிமையாளர், கோண்டாவில்)

யாழ்.திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் Park Road, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் பகீரதன் 18.01.2007 அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா பாலசுப்பிரமணியம் (பிறண்டிக் கடை சுப்பையா) மற்றும் கமலாதேவி (U.K) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் குமரகோட்டம் கோண்டாவிலைச் சேர்ந்த நவரட்ணராஜா - சரோஜினிதேவி (கனடா) தம்பதியரின் மருமகனும் கலைமகளின் (சாந்தி) கணவரும் தசரதன் (கனடா), கிரிதாரணி (புனித செந்திரேசாள் மகளிர் கல்லூரி, வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பவானி, சியாமளா(U.K), வரதராஜன் (U.K), வரதலட்சுமி (U.K) ஆகியோரின் சகோதரனும் தில்லை நேசன், ராஜநவநாதன் (U.K), துஷ்யந்தி (U.K), பாலச்சந்திரன் (U.K), திருச்செந்தில் (கனடா), திருமகள் (கனடா), சபிதா (கனடா), செந்தூரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் தியாகலிங்கத்தின் (கனடா) சகலனும் சுப்பையா தேசிகநாதனின் பெறாமகனும் வனிதா ஸ்ரீகாந்தா(கொழும்பு), சகிதா, ராஜ்குமார், பார்த்திபன் (ஜேர்மனி) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலங்கை மின்சார சபை விடுதி,
Park Road, வவுனியா.
தொ.பே.: 024 222 4245.

"பிரசாந்தி",
104, பலாலி வீதி, தபால்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி. தொ.பே: 021 222 6341

தகவல்:
தி.தில்லைநேசன்
(மைத்துனர்).

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 – 222 9944

# ஈராக்கை அடுத்து ஈரான் மீது கண் வைக்கின்றது ஏகாதிபத்தியம்

'சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தானாம் ஆண்டி'- என்பார்கள்.. அந்தக் கதை போன்றதாயிருக்கின்றது ஈராக் கில் அத்து மீறி அமெரிக்கா மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நட வடிக்கை.

தன்னுடைய சா்வதேச பொலிஸ்காரன்தனத்தை ஈராக் மீது காட்ட முயன்ற அமெரிக்க அரச நிா்வாகத்தினரும், ஜனாதிபதி புஷ்ஷும் இப்போது ஈராக்கில் தமது படைகளை வைத்திருக்கவும் முடியாமல், திரும்பி வாபஸ் பெறவும் இயலாமல் , சுடுதணலில் கால் வைத்தவா்கள் போலத் துடியாய்த் துடிக்கின்றாா்கள்.

தமது அமெரிக்கப் படைகளை மட்டுமல்லாமல் தமது நேச நாட் டுப் படையணிகளையும் ஈராக் என்ற புதைகுழிச் சேற்றுக்குள் இழுத்து வீழ்த்தி விட்டு அவற்றோடு சோ்ந்து அந்தரிக்கிறாா் அதிபா் புஷ்.

என்னவாயினும், நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்டுள்ள அமெரிக்க நேச நாடுகளில் பல, இதுவரை ஈராக் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்காகத் தாம் அனுப்பி வைத்த தமது படையணிகளை மெல்ல, மெல்ல – சத்தம் சந்தடியின்றி – வாபஸ் பெற எத்தனித்து வருகின்றன. சில நாடுகள் ஏற்கனவே வாபஸ்பெற்று விட் டன. இன்னும் சில, விரைவில் வாபஸ் பெற முடிவு செய்துள்ளன.

இனி, ஈராக்கில் இப்போது அமெரிக்காவினால் ஆட்சியில் அமா்த் தப்பட்ட பொம்மை அரசும், அங்குள்ள அமெரிக்கப் படைகளும், அதன் மிகநெருங்கிய நேசப்படைகளான பிரிட்டிஷ் துருப்புகளுமே தனித்து நின்று ஈராக் கிளா்ச்சியாளா்களை எதிா்கொள்ளும் இக்க நிலைமை உருவாகி வருகின்றது.

அதுவும், பிரிட்டனின் தற்போதைய பிரதமா் ரொனி பிளேயா் பதவி இறங்க இருக்கையில் கட்சிக்குள் அவருக்கு நோ் விரோதப் போக்குடைய கோல்டன் பிறவுண் அடுத்த பிரதமராகலாம் என்று கணிக்கப்படுகின்றது. அவா் பதவியேற்ற பின்னா், ஈராக் விடயத்தில் அமெரிக்க அதிபா் புஷ்ஷை, பிரிட்டன் கூட 'காய் வெட்டி' கைவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அமெரிக்காவுக்கு, ஈராக் ஒரு புதைகுழி என்று கூறப்படுவதும் பொருத்தமானதே.

புதைகுழிச் சேற்றில் வீழ்ந்து அதற்குள் புதையுண்டு போகின்ற ஒருவன், அதிலிருந்து மேலே – வெளியே – வருவதற்காகத் தனது பாதத்தால் புதைகுழிச் சேற்றை மேலும் மேலும் அமுக்கி மிதித்து, உன்னி, உயர முயலுவான். ஆனால் மாறாக, அமுக்கி, மிதிக்க மிதிக்க அவன் மென்மேலும் அதற்குள் அமிழ்ந்து போவான்.

இதுதான் அமெரிக்காவின் இன்றைய நிலையும். சுதேசிகளின் கிளா்ச்சியால் பூகம்பமாக இருக்கும் ஈராக்கைத் தனது அடக்கு முறைக் கட்டுப்பாட்டுக்குள் முற்றும் முழுதாகக் கொண்டு வருவதற்காக மென்மேலும் அமெரிக்கப் படைகளை அங்கு கொண்டுபோய்க் குவிக்க அதிபா் புஷ் திட்டமிடுகின்றாா். இது அமெரிக்கப் படைகளை மென்மேலும் ஆபத்துக்குள் சிக்க வைக்கும் நடவடிக்கையேயன்றி, அமெரிக்க அதிபா் கனவு காண்பது போல, ஈராக்கின் சுதேசிகளின் கிளா்ச்சியை – எழுச்சியை – அது அடக்கப் போவதில்லை. அமெரிக்கா போன்ற அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புப் படை அங்கு மென்மேலும் குவிக்கப்படுவது, தமது தாயகத்தை விடுவிப்பதற்கான – சுதந்திரத்துக்கான – ஈராக்கிய சுதேசிய மக்களின் உணா்வெழுச்சியை மேலும் தீவிரப்படுத்த வைக்குமேயன்றி, ஆயுத முனையில் அதை அடக்க உதவப்போவதில்லை.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பது போல ஈராக்குக்கு மேலும் இருபதாயிரம் அமெரிக்கப் படைகளை அனுப்புவதற்கு அதிபா் புஷ் முடிவு செய்திருக்கின்றாா். ஆனால், அமெரிக்க செனட் சபையில் பெரும்பான்மைப் பலம் கொண்டிருக்கும் ஜனநாயகக் கட்சியின் செனட்டா்கள், புஷ்ஷின் இந்த முடிவுக்கு எதிராக, செனட் சபையில் ஒரு விசேட பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றத் திட்டமிடுகின்றாா்கள். அந்தப் பிரேரணையை அவா்கள் சபையில் வெற்றிகரமாக நிறைவேற்றினாலும் – இவ்விடயத்தில் அதிபா் புஷ் அதற்கு மாறாகச் செயற்பட்டாலும் – செனட்டா்களின் அந்தத் தீா்மானம் அமெரிக்க அதிபா் புஷ்ஷின் நடவடிக்கையைக் கட்டுப்படுத்தாது என்பதுதான் அமெரிக்காவில் உள்ள நிலைமையாகும்.

ஏற்கனவே ஈராக்கில் தலையிட்டு ஆக்கிரமிப்புச் சுவை கண்ட அதிபா் புஷ், அதேவேளையில் ஈரானுக்குள்ளும் தலையை நீட்டப் பாா்க்கின்றாா்.

இப்பிராந்தியத்தில் தரைக்கும், கடலுக்கும் கீழ் புதையுண்டு கிடக்கும் எரிவாயு, எரிபொருள்கள், கனிமங்கள் போன்றவற்றின் மீதே அமெரிக்காவுக்குக் கண். அதனால் தான் இப்பிராந்தியத்தைத் தனது நேரடி வல்லாதிக்கத்தின் கீழ்க் கொண்டு வரும் காய்நகா்த்தல் களை அது மேற்கொள்கின்றது.

ஈராக்கின் ஸ்திரத்தன்மையைக் குலைத்து, அதை நேரடியாக ஆக்கிரமித்து, பெரும் யுத்தச் சுடுகாடாக்கி, தனது பொம்மை அரசு ஒன்றை அங்கு நிறுவி, அந்தப் பிரதேசத்தை அடிமைப்படுத்தி நிற்கும் அமெரிக்கா, மெல்ல அருகில் ஈரான் பக்கமும் தலைநீட்டத் தயாராகின்றது.

மனித குலத்துக்கு எதிரான பேரழிவு ஆயுதங்களை ஈராக்கின் அப்போதைய அதிபா் சதாம் ஹுஸைன் தலைமையிலான அரசு தயாரிக்கின்றது என்ற அபாண்டக் குற்றச்சாட்டைக் கூறி அந்த நாட்டை ஆக்கிரமித்த புஷ் நிா்வாகம், அந்தக் குற்றச்சாட்டு பொய்யில் கட்டப்பட்ட வெறும் புளுகு என்பதைப் பின்னா் ஒப்புக் கொள்ள வேண்டியதாயிற்று. – அதுவும் ஈராக்கை மீள முடியாத பேரழிவுக்குள்ளும், நாசத்துக்குள்ளும் மூழ்கடித்த பின்னா்.

அதே பாணியில், ஈரான் மீதும் இப்போது குற்றம் சுமத்துகிறது அமெரிக்க ஏகாதிபத்தியம். பேரழிவு தரும் அணு ஆயுதங்களை ஈரான் தயாரிக்கிறது, ஈராக் கிளா்ச்சியாளா்களுக்கு அது உதவுகின்றது என்றெல்லாம் புஷ் நிா்வாகம் அடுக்கும் குற்றச்சாட்டுகள் எவ்வளவு தூரம் நம்பகத் தன்மையுடையவை, ஏற்றுக் கொள்ளத்தக்கவை என்பன கேள்விக்குரியவையே.

அரபுலகம் ஐக்கியப்படாமல், அமெரிக்க ஊடறுப்புக்கு இடம் கொடுத்து, பிளவுற்று நிற்கும் வரை ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக்கும், அடக்குமுறைக்கும் எரிபொருள் வளம் புதைந்து கிடக்கும் அரபுலக நாடுகள் ஒவ்வொன்றாக இலக்காகி அடிபணிவது தவிா்க்கப்பட் முடியாததாகவே இருக்கும்.

# தரம் 1, தரம் 2 வகுப்புகளில் இத்தவணையில் தமிழும் சிங்களமும் போதிக்கப்படும்

அச்சுவேலி,ஜன.18

பாடசாலைகளில் தரம் 1, தரம் 2 கற்றலுக்கான பாடவிதானம் இந்த வருடத்திலிருந்து மறுசீரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

இவ்வருடத்தின் முதலாம் தவணையிலிருந்து புதிய பாட விதானம் நடைமுறைக்கு வரும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

மறு சீரமைப்புச் செய்யப்பட்ட பாடவிதானத்தின் பிரகாரம் -

✱ இரண்டாவது தேசிய மொழியாக சிங்கள மாணவா்கள் தமிழையும் தமிழ் மாணவா்கள் சிங்களத்தையும் கற்றல்.

✱ நாளாந்தம் 20 நிமிடங்கள் உடற் பயிற்சி வேலைத் திட்டத்தை மேற்கொள்ளல்.

✱ வாய்மொழி மூல ஆங்கில வேலைத் திட்டத்தை கணித பாடத்துடன் அமுல்படுத்தல்.

✱ பகல் உணவு வழங்கும் திட்டத்துக்கு நேரம் ஒதுக்குதல்:

✱ஆசிரியா் வழிகாட்டல் கோவையை அறிமுகப்படுத்தல் - என்பன நடைமுறைக்கு வரும் அதேவேளை - பாட நூல்களில் எந்தவித மாற்றமும் இல்லை எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது.

(அ-202-11)

# 23 அடி பட்டம் ஏற்றிச் சாதனை

படம்: சுந்தரலிங்கம்

கரவெட்டி, ஜன.19

வடமராட்சியில் பட்டம் ஏற்றும் 'சீசன்' ஆரம்பமாகியுள்ளது.

தைப்பொங்கலை ஒட்டி பல இளைஞா்கள் பல்வேறு வகைப்பட்ட பட்டங்களை பறக்கவிட்டனா்.

வதிரி மேற்கைச் சோ்ந்த பொம்மா்ஸ் விளையாட்டுக் கழக உறுப்பினரான சுந்தரலிங்கம் சுபாஸ் என்ற இளைஞன் புதிய சாதனை ஒன்றை ஏற்படுத்தியுள்ளாா்.

மனித வடிவிலான 23 அடி உயர இராட்சத பட்டம் ஒன்றைத் தயாரித்து தைப்பொங்கல் தினத்தன்று ஏற்றினாா்.

ஏராளமானவா்கள் இந்தக் காட்சியைக்கண்டு களித்தனா். (1-70)

## நாளை

தை - 06
சனிக்கிழமை
20.01.2007
திதி : பிரதமை
முற்பகல் 09.29
நட்சத்திரம் : திருவோணம்
முன்னிரவு: 07.16 வரை
சுபநேரம் : 03.35 - 05.05
ராகுகாலம் : 09.35 - 11.05

# கூட்டுறவுச் சங்கக் கிளை மீண்டும் இயங்குகின்றது

யாழ்ப்பாணம், ஜன.19

புங்குடுதீவு - நயினாதீவு ப.நோ.கூ. சங்கத்தின் 14 ஆம் இலக்க கிளை மீண்டும் பழைய இடத்தில் இயங்குகின்றது.

இத்தகவலை சங்கத் தலைவா் தெரிவித்துள்ளாா்.

அப்பகுதி மக்கள் குறிப்பிடப் படும் தினங்களில் இக்கிளையில் பொருள்களைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை சங்கம் எடுத்துள்ளதாகவும்அவா் மேலும் தெரிவித்தாா்.

இதேவேளை, மடத்துவெளிக் கிளையையும் பழைய இடத்தில் இயக்க நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாகவும் அவா் தெரிவித்தாா்.

(202)

# கிழக்கைப் பிடித்து விட்டதாக அரசு கூறுவதில் உண்மையில்லை

கொழும்பு, ஜன.18

கிழக்கைப் பிடித்துவிட்டதாக அரசாங்கம் கூறுவதில் எந்தவித உண்மையும் இல்லை. பிரசாரத் தந்திரமாக அரசாங்கம் இப்படிப் கூறுகின்றது.

இவ்வாறு விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளா் இ.இளந்திரையன் தெரிவித்திருக்கின்றாா்.

கிழக்கில் எங்களது வலுவான நிலை மட்டக்களப்பு. அம்பாறையில் நாம் நகரும் முகாம்களையே வைத்திருக்கின்றோம். திருகோணமலைப் பகுதியில் தொடா்ந்த வண்ணமே இருக்கின்றன- என்று மலேசிய ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையில் இளந்திரையன் இவ்வாறு கூறியுள்ளாா்.

(அ)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.19

கோப்பாய் பிரதேச அனைத்து முன்பள்ளி ஆசிரியா்களுக்கான கலந்துரையாடல் நாளை காலை 9.30 மணியளவில் அத்தியாா் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

# கடத்தல்கள் குறித்து முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

கடத்தல், கைது மற்றும் உயிருக்கு அச்சுறுத்தல் காரணமாக சரணடைந்தமை தொடா்பாக நான்கு முறைப்பாடுகள் நேற்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டன.

கோப்பாய் தெற்கைச் சோ்ந்த ஆறுமுகம் மயூரன் (வயது-21) என்பவரின் வீட்டுக்கு நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் சென்ற இனந்தெரியாதோா் அவரைக் கடத்தி சென்றதாக அவரது பெற்றோா் முறைப்பாடு செய்துள்ளனா்.

அத்துடன், கல்வியங்காட்டைச் சோ்ந்த சிவசுப்பிரமணியம் றேகன் (வயது-23) என்பவரும் வீட்டில் வைத்து கடத்தப்பட்டுள்ளாா். நேற்று அதிகாலை 4 மணியளவில் அவரது வீட்டுக்குச் சென்ற இனந்தெரியாதோா் அவரின் கண்களைக் கட்டி அழைத்துச் சென்றதாக அவரது மனைவி முறைப்பாட்டில் தெரிவித்துள்ளாா்.

இதே வேளை, உடுப்பிட்டிப் பகுதியைச் சோ்ந்த இளம் குடும்பஸ்தா் ஒருவா் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து மனித உரிமை ஆணைக்குழுவில் சரணடைந்துள்ளாா். இவரை பாதுகாப்பாகத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகளை ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது.

அத்துடன், கிருஸ்ணபாலமூா்த்தி ராஜ்குமாா் (வயது-18) என்ற யாழ்ப்பாண இளைஞன் கொழும்பில் வைத்து பொரளைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாக அவரது சகோதரி முறைப்பாடு செய்துள்ளாா்.

(8-68)

## கல்வியியற்கல்லூரி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்.தேசியக் கல்வியியல் கல்லூரியில் இவ்வாண்டில் மாணவா்களை இணைத்துக்கொள்வதற்கான நோ்முகப் பரீட்சை எதிா்வரும் 5 ஆம் திகதி தொடக்கம் கல்லூரியில் நடைபெறும். கல்லூரி பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் இத்தகவலைத் தெரிவித்தாா். (1-202)

# குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

## சிக்குன்குனியா வைத்தியமுகாம்

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகம் நடத்தும் மருத்துவ முகாம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அல்லாரை வெள்ளாம்போக்கட்டி அரசினா் தமிழ்கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

டாக்டா் செல்வி கந்தையா தலைமையில் நடைபெறவுள்ள இம் முகாமில் சிக்குன்குனியா காய்ச்சல், சலரோகம், இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கான மருத்துவசேவை நடத்தப்படும்.

(1-202)

## மணற்காட்டில் விபத்தில் ஒருவர் மரணம்

பருத்தித்துறை - குடத்தனை வீதியில் மணற்காட்டுச் சந்தியில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தொன்றில் குடும்பஸ்தா் ஒருவா் உயிரிழந்தாா்.

குடத்தனை, பொற்பதி வீதியைச் சோ்ந்த தியோகுப்பிள்ளை பிலோமிநாதன் (வயது-57) என்பவரே உயிரிழந்தவராவாா்.

மோட்டாா் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அது கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதிலேயே மோட்டாா் சைக்கிளின் பின் இருக்கையில் அமா்ந்திருந்தவா் உயிரிழந்தாா்.

மோட்டாா் சைக்கிள் ஓட்டியான மருதலிங்கம் உதயன் படுகாயம் அடைந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சோ்க்கப்பட்டுள்ளாா்.

(1-78-173)

## 3,000 தபால் பொதிகள் கப்பல் மூலம் வந்தன

திருகோணமலையில் இருந்து 'ஜெனி கிளிப்பா்' கப்பல் மூலம் நேற்று 3 ஆயிரத்து 312 தபால் பொதிகள் குடாநாட்டுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என பிரதித் தபால் மா அதிபா் எம்.குமரகுரு தெரிவித்தாா்.

இத் தபால் பொதிகளை இறக்கும் பணி பருத்தித்துறை துறைமுகத்தில் நேற்று நடைபெற்றது.

திருகோணமலை, வவுனியா, கொழும்பில் மேலும் 7 ஆயிரத்து 513 தபால் பொதிகள் உள்ளன என்றும் -

அவற்றை எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்றும் - அவா் மேலும் தெரிவித்தாா். (1-173)

## கல்வியியலாளர் பரீட்சைக்கு பெப்ரவரி இறுதி வரை தோற்றலாம்

கல்வியியலாளா் சேவை - தரம் II இற்கு நோ்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளவா்கள் அடுத்த மாதம் இறுதி வரை சமுகமளிக்கலாம் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் கொழும்பில் நடைபெற்று வருகின்ற இந்த நோ்முகப் பரீட்சைக்கு 140 போ் யாழ்ப்பாணத்தில் இருந்து அழைக்கப்பட்டிருந்தனா்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக பெரும்பாலானோா் பரீட்சைக்குத் தோற்றமுடியவில்லை. எனினும் இவா்கள் அடுத்தமாத இறுதி வரை தோற்ற வசதி செய்யப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.பரீட்சாா்த்திகள் கொழும்பு வந்தவுடன் பரீட்சைப் பிரிவுடன் தொடா்பு கொண்டு பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்று கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (1-202-11)

## இ.போ.ச.ஊழியரின் பணிக்கொடையில் 50 வீதம் கிடைத்தது!

வடக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையிலிருந்து இளைப்பாறிய ஊழியா்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவின் ஐம்பது வீதத்தை வழங்குவதற்கான நிதி கிடைத்துள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளா் தெரிவித்தாா்.

31.12.2005 இற்கு முன்னா் சபையில் இருந்து இளைப்பாறிய ஊழியா்களுக்கே பணிக்கொடை கொடுப்பனவில் 50 சதவீதம் வழங்கப்படவுள்ளது.

சம்பந்தப்பட்டவா்களை இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் தலைமைக் காரியாலயத்துடன் தொடா்புகொள்ளுமாறு அவா் கேட்டுள்ளாா். (1-203)

## வன்னிக்குப் புறப்பட்டவரை காணவில்லையாம்

கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் வன்னிக்குச் செல்வதாகக் கூறி சென்ற இளம் குடும்பப் பெண் பற்றி இதுவரை எந்தவொரு தகவலும் இல்லை. இது குறித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மிருசுவில் பகுதியில் இருந்து இடம் பெயா்ந்து தொண்டைமானாறில் வசித்த வசந்தன் அனித்தா (வயது-23) என்பவரே இதுவரை வன்னி சென்று சேரவில்லை எனவும் அவா் தொடா்பாக எந்தத் தகவலும் இல்லை எனவும் அவரது தாயாா், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளாா். (8-68)

# மேலும் இரு புலிகளின் முகாம்கள் தம்வசம் என்கிறது இராணுவம்

அம்பாறை கஞ்சிகுடிச்சாறுப் பிரதேசத்தில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின்போது மேலும் இரண்டு விடுதலைப் புலிகளின் சிறு முகாம்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது இந்த முகர்ம்கள் இரண்டும் கைப்பற்றப்பட்டன என்றும் -

இராணுவ நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என்றும் - தெரிவித்தார்.

அதேசமயம் கஞ்சிகுடிச்சாறு விசேட அதிரடிப்படை முகாமிற்கு நேற்று நண்பகல் 12 மணியளவில் விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து தப்பிய இருவர் சரணடைந்துள்ளனர் எனவும் பிரிகேடியர் சமரசிங்க தெரிவித்தார். (த)

## இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 19

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனை பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யும்படி கோரி ஜாதிக ஹெல உறுமய இன்று ஆர்பாட்ட மொன்றை நடத்துகின்றது.

நுகேகொடையிலுள்ள ஜாதிக ஹெல உறுமய பிரதான அலுவலகத்துக்கு முன் னால் இன்று மாலை 3 மணிக்கு இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுமென ஜாதிக ஹெல உறுமய வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மோட்டார் சைக்கிள் பதிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.19

குடாநாட்டில் மோட்டார்சைக்கிள்களைப் படைமுகாம்களில் பதிவுசெய்யும் இறுதித்தினம் நேற்றாகும்.

எனினும், முகாம்களுக்குச் சென்றவர்களிடம் நாளை வரையும் பதிவுகளை மேற்கொள்ளலாம் என சில முகாம் படையினர் தெரிவித்துள்ளனர் என மக்கள் தரப்பில் கூறப்பட்டது. (1)

## கோட்டபாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

இவர்களை விடுவிக்குமாறு இச்சம்பவம் குறித்து விசாரணை செய்துவரும் கொழும்பு குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினர் கோரியமையை அடுத்து அதற்கு நீதிவான் அனுமதியளித்து உத்தரவு வழங்கினார். (உ)

## ஷெல் வீச்சில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழு ஆகியவற்றுக்கு இது குறித்து தெரியப்படுத்தப்பட்டது.

மாலை 5.15 மணி தொடக்கம் மீண்டும் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதன்போது ஷெல்கள் வைத்தியசாலை வளாகப் பகுதிக்குள் வீழ்ந்து வெடித்தன - வைத்தியசாலை விடுதிக்கு அருகில் உள்ள இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த கட்டடம் மீது வீழ்ந்து வெடித்ததில் அக்கட்டடம் முற்றாக சேதமடைந்தது.

அங்கு தங்கியிருந்த மக்களில் நால்வர் காயமடைந்தனர். காயமடைந்த ஆறு பேரும் வாகரை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (த)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தரும் பணி இப்போது ஆஸ்திரேலியாவின் ''ஸ்பெக்ராம்'' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களையும் அமைச்சர் பௌசி இங்கு வெளியிட்டார்.

இலங்கையில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை விஸ்தரிக்கவும், நாளாந்தம் 100,000 பரல் எண்ணெயைச் சுத்திகரிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். இப்போது நாளாந்தம் 50,000 பரல் எண்ணையே சுத்திகரிக்கப்படுகின்றது.

## அரசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுத் தருவார்கள் என்று கூறினர்.

ஆனால், எமக்கு இன்னும் பதில் தரப்படவில்லை. இந்த நிலையில் நாம் அமைச்சுப் பதவிகளைப் பெற விருக்கின்றோம் என்றும், விரைவில் இணையப் போகின்றோம் என்றும் தெரிவித்து ஊடகங்களில் வருகின்ற செய்திகளில் எந்தவிதமான உண்மைகளும் இல்லை.

அமைச்சுப் பதவிகளைப் பெறுவது பற்றி நாம் இன்னும் பேசவேயில்லை. அமைச்சுப் பதவிகளைப் பெறவிருக்கின்றோம் என்று அரச தரப்பில் கூறினாலும் அதில் உண்மையில்லை.

நாம் முன்வைத்துள்ள நிபந்தனைகளை அரசு ஏற்காவிட்டால் நாம் இணைந்து எந்தப் பிரயோசனமும் இல்லை. நாம் அரசில் இணைய வேண்டும் என்றால் எமது நிபந்தனைகளை அரசு ஏற்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை. அமைச்சுப் பதவிகள் மீது நாம் கவனம் செலுத்த வேயில்லை.

நிபந்தனைகளை அரசு ஏற்றதன் பின்பே, அமைச்சுப் பதவிகளைப் பெறு வது பற்றி நாம் கலந்தாலோசிப்போம். அரசின் பதிலை நாம் எதிர்பார்க்கின்றோம்.'' - என்றார். (ஐ)

## மன்னாரில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்ட தேடுதலின்போது இரண்டு கிளைமோர்கள் உட்பட்ட வெடிபொருள்கள் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

## வாகரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்குதல் எதுவும் மேற்கொள்ளப்படாத நிலையிலும் இராணுவ உபகரணங்கள் எதுவும் அங்கு களஞ்சியப்படுத்தப்படாத நிலையிலும் அது எந்த பின்னணியிலும் தாக்கப்படக்கூடாது.

★ ஆஸ்பத்திரியை அண்டியுள்ள பகுதிகளில் தஞ்சம் அடைந்துள்ள பொதுமக்கள் மோதல்களில் நேரடியாகப் பங்குபற்றாமலிருக்கும் போது ஏனைய பொதுமக்களைப் போன்றே அவர்களும் பாதுகாக்கப்பட வேண்டும்.

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்பட வேண்டும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் ஜெனிவாவில் உள்ள தலைமை அலுவலகம் நேற்று விடுத்த அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது. (அ)

## படைவலு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதுமே தயார் நிலையில்தான் நாம் உள்ளோம் எனக் கூறினார்.

இளந்திரையன் மேலும் கூறியிருப்பதாவது:-

70களில் நாம் ஆயுதப்போராட்டத்தை ஆரம்பித்த போது கழுத்தில் மாட்டிய சயனைட்டை இன்னமும் நாங்கள் கழற்றவில்லை. மக்களின் பிரச்சினை முழுமையாகத் தீர்க்கப்படும் போதுதான் அதனை நாங்கள் கழற்றுவோம்.

படை ரீதியாகத் தயார் நிலையில் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு சிறிலங்கா அரசு எங்களைத் தள்ளியுள்ளது. கடந்த ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி வலிந்த தாக்குதலை சிறிலங்காப் படையினர் மேற்கொண்டனர். அந்த தாக்குதல்கள் தொடர்ந்தும் நடக்கின்றன.

சிறிலங்கா அரசின் இனவெறித் தாக்குதல்களில் ஏறக்குறைய 80,000 பேர் வரை உயிரிழந்துள்ளனர். எங்கள் மக்களின் பிரச்சினை தீரும்வரை எங்கள் போராட்டம் தொடரும் என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

## ஐ.தே.கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னடித்து வருகின்றனர் என்றும்-இதன் காரணமாகப் புதியவர்களை உள்வாங்குவதில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது என்றும்-தெரியவந்துள்ளது.

உள்வாங்கும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏழு பேருக்கு மட்டுமே அமைச்சுப் பதவிகளை வழங்கும்படி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்திருப்பதாகவும்-

இதன் காரணமாக இறுதிமுடிவு எதனையும் எடுக்க முடியாத சங்கட நிலைக்கு அரசுத் தலைவர் தள்ளப்பட்டுள்ளதாகவும் - அறியவருகின்றது. (அ-1)

## நாகர்கோவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தார்.

தேசிய பாதுகாப்பு ஊடகத்தகவல் நிலையம் இத் தகவலை நேற்றுத் தெரிவித்தது.

படையினர் பதில் தாக்குதலை நடத்தியதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## கண்காணிப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனவரி தொடக்கத்தில் கொழும்பில் ஆரம்பமாகிய கலந்துரையாடல் பட்டறையில் கலந்துகொள்வதற்காகக் கண்காணிப்புக்குழு, அதன் உறுப்பினர்களைக் கொழும்புக்கு அழைத்திருந்தது. இதனால், வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கண்காணிப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. பின்னர் ஜனவரி இரண்டாம் வாரத்தில் இருந்து யாழ். குடாநாடு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்குக் குழுவினர் விஜயம்செய்து மீண்டும் கொழும்பு திரும்பி இருந்தனர். தற்போது இவர்கள் மீண்டும் நிரந்தரமாகப் பணிபுரிவதற்காக இந்த மாவட்டங்களுக்குச் செல்கின்றனர் என்று கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் கொழும்பில் தெரிவித்தன.

**கிளிநொச்சி, யாழ்ப்பாணத்தில்**

கிளிநொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்களில் அவர்கள் தமது பணியை இன்று ஆரம்பிக்கவுள்ளனர். ஒயிஸ்ரன் விக், ஜென் குணர்ஸன் ஆகிய இரு பிரதிநிதிகள் முதற்கட்டமாக யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளனர்.

தன்து களப்பணிகள் தொடர்பாகக் கலந்துரையாடல் பட்டறையில் எடுக்கப்பட்ட மீளாய்வுத் தீர்மானங்கள் குறித்தும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, அரசு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்புகளுக்கு விளக்கமளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தரப்புகளின் இணக்கத்தைப் பெற்றே தற்சமயம் குழுவினர் மீண்டும் நிரந்தரமாகப் பணிபுரிய களப் பகுதிகளுக்குத் திரும்பிச் செல்கின்றனர் என்று குழு வட்டாரங்கள் தெரிவித்தன.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஒப்பமிட்ட தரப்புகளில் ஒன்று அதிலிருந்து விலகுவதாக முறைப்படி அறிவிக்கும் வரைதனது கண்காணிப்புக் பணியைக் கைவிடுவது தொடர்பில் குழு எந்த முடிவையும் தன்னிச்சையாக எடுக்காது என்றும் கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (ஐ)

விக்னா கல்வி நிறுவனம்
Head Office 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L Day Class
ஆரம்பமாகிவிட்டது.
(Mon., Tues., Thurs.)
Eco. - B. கஜிதரன் (7.00)
Tam. - குழந்தை (9.30)
Log. - கமல் (7.30)
HIC. - N.T. தரன் (8.30)
Geo. - N. பாபு (7.30)
P/Sci. - றொபின்சன் (8.30)
Chri. - வசந்தன் (8.30)
Drama - மயூரன் (10.30)

CHEMISTRY CENTRE
Temple Rd. (Green park அருகே)
A/L 2009
GENERAL
Tue. Fri 3.30 - 4.30
THERMO
Wed. 3.30 - 4.30
அன்பழகன் B.Sc.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
External Degree
2007 பிரிவுகளுக்கானது
(Jaffna University)
GAQ 1st in Com BA B Com
Minimum Requirement - GCE A/L 3 Passes
ஆரம்பம் :- 20-01-2007
aat (SriLanka)
Foundation level, Intermediate level & Final
Medium - Tamil & English Exam :- Jun 2007
Minimum Requirement - GCE O/L 5 Passes or GCE A/L 2 Passes
ஆரம்பம் - 20-01-2007 Medium :- English & Tamil
Further Details
Director
Jaffna College Undergraduate Dept
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

We Serve
மருத்துவ முகாம், கண்பரிசோதனை
எதிர்வரும் 21.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை எமது லயன்ஸ் கழகத்தால் பொது மருத்துவமுகாமும், கண்பரிசோதனையும் உரும்பிராய் அரச வைத்தியசாலை வளாகத்தில் நடத்தப்படும்.
கொழும்பு லயன்ஸ் கழகங்களால் ஓரளவு மருந்து வகைகளும் கண்ணாடிகளும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.
தலைவர்
அரிமாக் கழகம்
உரும்பிராய்.
(57247)

விக்னா கல்வி நிறுவனம்
Head Office 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கணக்கீடு
திரு. P. பகீரதன்
A/L 2007 காசுப்பாய்ச்சல் கூற்று
(Sat. Sun. 11 - 12)
2008 நிலையான சொத்து முடிவு செய்தல்
(Sat. Sun. 10 - 11)
2009 அறிமுகம்
(Sat. Sun. 09 - 10)
Day Class நிலையான சொத்து
முடிவு செய்தல்
பங்குடமை முடிவுக் கணக்கு
[திங். செவ். வியா. வெள். 8.30]
Paper Class இருப்பு மதிப்பீடு
(Sat. Sun. 12 - 2)

திருநெல்வேலியில்
A/L 2008
CHEMISTRY
S. Vasu
INORGANIC
ஆரம்பம்: 20.01.2007
சனி: 2.30 p.m.
நாவலர்
பலாலி வீதி, திருநெல்வேலி.

கணக்கீடு
A/L 2009
ஆரம்பம்: சனி: 9 a.m.
A/L 2008
ஒற்றைப்பதிவு
ஆரம்பம்: சனி: 6.45 a.m.
A/L 2007
கம்பனி நிதி முடிவுக் கணக்கு
ஆரம்பம்: சனி: 8 a.m.
S. தவா B.Com.
(HONS) (Acc. spl)
NIRU Tuition Center
Kondavil.

கணக்கீடு
By: J.T. அழகன்
நாளை ஆரம்பம்
2009 (ஆரம்பத்தில் இருந்து)
Sat., Sun. 8 - 9 a.m.
2008 (ஒற்றைப்பதிவு)
(Sat., Sun. 9-10 a.m.)
2007 (காசுப்பாய்ச்சல் கூற்று)
(Sat., Sun.10-11a.m.)
COLLEGE OF ACCOUNTING
பலாலி வீதி, திருநெல்வேலி.

## மரண அறிவித்தல்கள்

### முருகேசு சின்னத்துரை

(ஓய்வு பெற்ற களஞ்சியப்பொறுப்பாளர்)

வரியப்புலத்தை பிறப்பிடமாகவும் கன்னாகம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சின்னத்துரை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி ந.கௌரியின் (ஆசிரியை, தமிழ்க் கந்தையா வித்தியாசாலை- கந்தரோடை) அன்புத் தந்தையும் மு.நடராசாவின் (ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை) மாமனும் ந. அபிராமி, ந.அகீதன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2007) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் மு.ப.11 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.நடராசா.

### சுப்பிரமணியம் சுந்தரலிங்கம்

(விவசாய ஆராச்சி நிலையம், திருநெல்வேலி)

செருக்குடலம், தெல்லிப் பழையை பிறப்பிடமாகவும் உப்பு மட ஒழுங்கை, கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சிவகாமிப்பிள்ளை தம்பதியரின் மகனும் குணரத்தினம் இரத்தினத்தின் மருமகனும் கமலாதேவியின் (ராசு) கணவரும் நிரோஜினி (ஞானக்குழந்தை இல்ல பாலர் பாடசாலை ஆசிரியர்), நிஷாந்தன் ஆகியோரின் தந்தையும் கமலாதேவி, அமிர்தலிங்கம் (சுவிஸ்), நகுலாதேவி, கனகமணி, கணேசலிங்கம் (சுவிஸ்) காலஞ்சென்ற நேசலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் சகோதரருமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 19.01.2007 மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உப்புமட ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்:
கமலாதேவி (மனைவி),
[illegible]

(57320)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் மருதர் சரவணை

(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்)

மலர்வு: 10.10.1925 உதிர்வு: 20.12.2006

20.12.2006 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (19.01.2007) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்க வீதி,
மானிப்பாய்.

குடும்பத்தினர்.

தகவல்: ப. நாகேஸ்வரி (மகள்)
கொழும்பு - 13.

(57245)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கணபதிப்பிள்ளை தெய்வானை

காரைநகர், களபூமி பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும் 53/7, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை தெய்வானை நேற்று (18.01.2007) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - காசுவதி தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சாபதிப்பிள்ளை - அன்னபூரணத்தின் மருமகளும் சிவசுப்பிரமணியத்தின் பாசமிகு சிறியதாயும் சிவமணியின் மாமியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, கதிரவேலு, வள்ளியம்மை, மகரகம செல்லத்துரை, இலட்சுமி ஆகியோரின் சகோதரியும் ஆறுமுகம், சின்னம்மா, பொன்னம்பலம், பரிமளம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் திரு. திருமதி நந்தனகுமார் - மஞ்சுளா, திரு. திருமதி மகேந்திரன் - தாட்சாயினி, அருள்குமார் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் தமிழினியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று காலை 8 மணிக்கு காரைநகர் தில்லை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

53/7, ஆடியபாதம்வீதி,
திருநெல்வேலி.

(57239)

தகவல்:
க.சிவசுப்பிரமணியம் (மகன்).

### இளையகுட்டி கதிரமலை

துர்க்காபுரம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் மன்னாரை வசிப்பிடமாகவும் கொண்ட இளையகுட்டி கதிரமலை 16.01.2007 செவ்வாய்க்கிழமை கால மானார். அன்னார் காலஞ்சென்ற இளையகுட்டி மற்றும் சிவபாக்கியம் தம்பதியரின் மூத்த மகனும் வசந்தியின் அன்புக் கணவரும் மீரா, ஜெனிஸ்ரன், அமுதன், மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மல்லிகாதேவி, விமலராணி, ஜெகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிறிகாந்தி, தாசன், செல்வராசா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கியைகள் 17.01.2007 அன்று மன்னாரில் அவரது இல்லத்தில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துர்க்காபுரம், தெல்லிப்பழை.

(57236)

தகவல்:
ஜெகநாதன் (சகோதரன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.